Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.9**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஹேமாவதி | Calling: | காவல் ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | வீரசிவாஜீ | Religion: | |
| Village: | நாட்றம்பள்ளி | Age: | 45 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 18.08.2025

( எதிரி ஆஜர் இல்லை, கு.வி.மு.ச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது.)

அ.சா. 9 முதன்மை விசாரணை

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் உதவி ஆய்வாளர் தங்கராஜ் என்பவர் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்ற எண் 235/2017 பிரிவுகள் 294(b),323,324,506(ii) இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்து மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து 30.06.2017 ம் தேதி இவ்வழக்கின் எதிரி கோபிநாத் என்பவரை கைது செய்து எதிரியிடம் இருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியும் இவ்வழக்கின் எதிரி 1 கோபிநாத்தை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் எதிரி 2 ஜெயவேல் என்பவர் தலைமறைவாக இருந்து வந்த நிலையில் மேற்படி இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் திரு. தங்க ராஜ் என்பவர் முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து மேல் கட்ட புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்தார்,.

இவ்வழக்கை நான் மேற்கட்ட புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே உதவி ஆய்வாளர் தயாரித்தது போலவே ஆவணங்கள் இருந்ததால் நான் தனியாக பார்வை மகசரோ மாதிரி வரைபடமோ தயார் செய்யவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்த போது ஏற்கனவே உதவி ஆய்வாளரிடம் கூறிய குவிமுச பிரிவு 161 (3) படி வாக்குமூலத்தில் உள்ளது படியே கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

இவ்வழக்கில் காயம்பட்ட வேணு மற்றும் எதிரி கோபிநாத்திற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ராம் பாலாஜி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வேணுவிற்கு கொடுங்காயம் என்றும் கோபிநாத்திற்கு சொற்ப காயம் என்றும் சான்றிதழ் பெற்றேன். மருத்துவர் வேணுவிற்கு கொடுங்காயம் என சான்றிதழ் வழங்கியதால் சட்டப்பிரிவுகளை 294(b),323,324,506(ii) இதச என்பதை 294(b),323,324,325,506(ii) இதச என மாறுதல் செய்து அறிக்கை தாயர் செய்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 11 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.** இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் கோபிநாத் மற்றும் ஜெயவேல் மீதான குற்றங்கள் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(b),323,324,325,506(ii) இதச படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் மருத்துவரை விசாரித்தபோது அ.சா 1 கோபிநாத் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று கூறியுள்ளாரா என்றால் சரிதான். அதை குறித்து சான்றிதழ் வழங்கியுள்ளாரா என்றால் வழங்கியுள்ளார். சான்று வழங்கியதன் அடிப்படையில் அ.சா 1 மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வழக்கு ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். இவ்வழக்கிற்கு கேஸ் இன் கவுண்டர் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா. 1 சம்பவம் எப்போது நிகழ்ந்ததாக கூறியுள்ளார் என்றால் 29.06.2017 ம் தேதி என்று கூறிப்பிடபட்டுள்ளது. அ.சா.1 வாக்குமூலத்தில் 28.06.2017 என குறிப்பிட்டு அதன் பின்னிட்டு 29.06.2017 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று

சொன்னால் சரிதான். இதுக்குறித்து வாக்குமூலம் பதிவு செய்த அதிகாரியிடம் விசாரணை செய்தேனா என்றால் 29.06.2017 ல் நடைபெற்றதாக கூறினார். அ.சா 1 சம்பவம் எந்த இடத்தில் நடந்ததாக கூறியுள்ளார் என்றால் குந்தானி மேடு பஜனை கோவில் தெரு, வாதியின் தந்தை வீட்டின் முன்பு நடைபெற்றதாக கூறியுள்ளார். அதுக்குறித்து வாதியின் தந்தை பெருமாள் மீது ஏதேனும் விசாரணை செய்துள்ளோமா என்றால் இல்லை. அ.சா 1 வாக்குமூலத்தில் நிலச்சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக கூறியுள்ள நிலையில் அதை குறித்து விசாரணை செய்துள்ளோமா என்றால் இல்லை. ஏற்கனவே எதிரி 1 மேல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அ.சா.1 ன் தந்தை பெருமாள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்து அந்த உத்தரவின் அடிப்படையில் தங்கள் காவல் நிலையத்தில் விசாரித்தது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த தேதியில் மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன் என்றால் 14.07.2017. நான் மேல் விசாரணைக்கு கோப்பை எடுத்துக்கொண்ட நிலையில் சம்பவயிடம் சென்றேனா என்றால் சென்றேன். எதிரி கோபிநாத்தை நான் எந்த இடத்தில் பிடித்ததாக கூறியுள்ளேன் என்றால் மேட்டுபாளையம் கூட்ரோடிடம் கைது செய்தேன் . வழக்கு சொத்தை யாரிடம்இருந்து கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சம்பவயிடத்தில் இருந்து கைப்பற்றினேன். என் முதன்மை விசாரணையில் வழக்கு சொத்தை எதிரி 1 இடம்இருந்து கைப்பற்றியதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சம்பவயிடத்தில் கைப்பற்றியதாக கூறியுள்ளேன். அ.சா.1 முதல் அ.சா 8 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த தங்கராஜ் இடம் கூறியதை அப்படியே என்னிடம் கூறியதால் நான் பதிவு செய்யவில்லை. அ.சா. 1 வாக்குமூலத்தில் எத்தனை பேர் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் மூன்று நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளார். அதுக்குறித்து அ.சா 1 இடம் மறுவிசாரணை ஏதேனும் செய்தோமா என்றால் வாக்குமூலத்தில் இருந்ததால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. ஏற்கனவே நிலப்பிரச்சனை இருந்தது குறித்து வாக்குமூலத்தில் கூறியுள்ளதின் அடிப்படையில் அதைக்குறித்து விசாரித்துள்ளேனா என்றால் நிலத்து பிரச்சனை பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. 29.06.2017 அன்று என்அப்பாவிடம் சென்று எனக்கு பிரித்து கொடுத்த நிலத்தை எனக்கு ரிஜீஸ்டர் செய்து தருமாறு கூறினேன் என்று கூறியுள்ளார் என்றால் அது நிலப்பிரச்சனை இல்லை. அ.சா. 1 ன் அப்பாவை இதுக்குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. விசாரித்திருந்தால் தான் வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதைப்பற்றி தெரியவந்திருக்கும்

என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் அ.சா 1 வாக்குமூலம் கொடுத்தாரா அல்லது அ.சா 2 வாக்குமூலம் கொடுத்தாரா என்று தெரியவந்ததா என்றால் அ.சா1 தான் கொடுத்தார். அ.சா 1 விசாரணையில் அ.சா.1 மயக்கநிலையில் இருந்ததாகவும், அ.சா 2 தான் வாக்குமூலம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அ.சா 3 மற்றும் 4 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா 5 மற்றும் அ.சா 6 காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தோம் என்றும் சம்பவயிடத்திற்கு யாரும் வரவில்லை என்றும் கூறியருந்தால் சரியல்ல. அ.சா 7 சான்றிதழ் வழங்கியதாக கூறிப்படும் மருத்துவர் திரு. ராம்பாலாஜீ என்பவர் அவ்வாறு சான்றிதழ் வழங்கவில்லை என்று கூறியிருந்தால் சரியல்ல. பட்டியல் சாட்சி .8 சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பத்என்பவரிடம் சரியாக விசாரிக்கமால் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்று கூறியிருந்தால் சரியல்ல. சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பத் என்பவரை சரியாக விசாரித்திருந்தால் சம்பவதேதியை திருத்தம் செய்ததை பற்றி ஒரு வாக்குமூலம் பெற்றிருப்பேன் என்றாலும் அவரை சரியாக விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அ.சா 1 வாக்குமூலத்தை சரியாக படித்து பார்த்திருந்தால் நிலம் குறித்த பிரச்சணையை விசாரித்திருப்பேன் அதனால் நான் வாக்குமூலத்தை சரியாக படிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரிவு மாறுதல் எதன் அடிப்படையில் செய்தேன் என்றால் காயச்சான்றிதழ் அடிப்படையில் செய்தேன். அ.சா 1 க்கு எங்கு காயம் அதிகமாக இருப்பதாக காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளது என்றால் பல் மருத்துவர் கருத்துரையின் படி. அ.சா 1 க்கு பல் ஏற்கனவே விழுந்து இருந்ததாகவும் மருத்துவமனையில் சேரும் சமயத்தில் வீக்கம் ஏதும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பட்டியல் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பத் என்பவரை சரியாக விசாரிக்காமல் எதிரியின் மீது தவறான ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 வாக்குமூலத்தில் கொடுங்காயம் ஏற்படும் அளவில் எதிரி கொடுங்காயம் ஏற்படுத்தும் ஆயுதங்களை கொண்டு மிரட்டியதாகவும், அடித்ததாகவும் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளதா என்றால் வலது பக்க வாய் மீது கையால் குத்தியதில பல் விழுந்துவிட்டதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார். கொடுங்காயம் ஏற்படுத்தும் ஆயுதங்களை கொண்டு மிரட்டியதாகவோ அல்லது அடித்ததாகவோ கூறாத

நிலையில் இதச 506(ii) பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பல் மருத்துவரிடம் கருத்துரையோ சான்றோ பெறாத நிலையில் இதச 325 பிரிவின் கீழ் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல.இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் புலன் விசாரணை செய்யமால் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ஹேமாவதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.20 10:11:36 +0530